# பூரண ஹர்த்தாலுக்கு பேராதரவு தாருங்கள்! தமிழ்க் கட்சிகள் மட்டக்களப்பில் கோரிக்கை

மட்டக்களப்பு, ஒக். 17

வடக்கு, கிழக்கில் எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம் பெறும் பூரண ஹர்த்தாலுக்கு வர்த்தக சங்கத்தினர், அரச ஊழியர்கள், போக்குவரத்துத் துறையினர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் முழுமையான ஆதரவு வழங்க வேண்டும் என்று தமிழ்த் தேசியப் பாதையில் பயணிக்கின்ற கட்சிகள் ஒன்றிணைந்து மட்டக்களப்பில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.ஸ்ரீநேசன், பா.அரியநேத்திரன், கிழக்கு மாகாண சபை முன்னாள் தவிசாளரும் ரெலோ அமைப்பின் பிரதித் தலைவருமான பிரசன்னா இந்திரகுமார், புளொட் அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் கேசவன், ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் உயர்பீட உறுப்பினரும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான இரா.துரைரெட்ணம், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் பிரதித் தலைவர் நகுலேஸ் ஆகியோர் கலந்துகொண்டு மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளனர்

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

“இந்த நாட்டில் நீதிபதிக்கே பாதுகாப்பு இல்லாத சூழல் என்றால் இந்த நாட்டில் ஜனநாயகம் எவ்வாறு பயணிக்கின்றது என்பதைச் சிந்திக்க வேண்டும். ஜனநாயக ஆட்சி இல்லாமல் 74 சதவீதமான சிங்கள மக்களின் இனவாத ஆட்சி நடைபெறுகின்றது.

வடக்கு - கிழக்கில் தொல்லியல் திணைக்களம் என்ற பெயரில் காணிகள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. அதேபோன்று வனஜீவராசிகள் திணைக்களம், வனவிலங்கு திணைக்களம், மாகாவலி திணைக்களம் ஊடாக பல்வேறுபட்ட ஆக்கிரமிப்புக்கள் வடக்கு - கிழக்கில் இடம்பெறுகின்றன.

எனவே, இதனைக் கண்டித்தும், வடக்கு - கிழக்கில் ஜனநாயகத்தையும் சட்ட ஆட்சியையும் மனித உரிமையையும் நீதித்துறையின் கௌரவத்தையும் பாதுகாப்பதற்காகவும் எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தால் - கடையடைப்பு - பொது வேலை நிறுத்தத்துக்கு அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும்” - என்றனர். (அ)

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 30 செவ்வாய்கிழமை 17.10.2023 கதிர் 94

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
Poo Aadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக கோட்டாபயவிடமும் இரகசியமான ஆவணங்கள் கையளிக்கப்பட்டன

### முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக கோட்டாபய ராஜபக்சவிடமும் இரகசியமான ஆவணங்கள் கையளிக்கப்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் இன்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இரண்டு நாட்களுக்கு முன்னர், பாதுகாப்பு அமைச்சின் பாதுகாப்பு ஆலோசகர் பேராசிரியர் ரோஹான் குணரத்ன, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்தும் விசாரணைக் குழுக்களுக்கு வெளிப்படுத்த முடியாத,

2➤



## சுதந்திரக் கட்சியில் தயாசிறிக்குப் பதவி?

“ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவுக்கு கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பதவியை வழங்குமாறு கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் யோசனை முன்வைத்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

தயாசிறி ஜயசேகர கட்சியுடன் இணைந்து பயணிக்க முன்வருமானால் தவிசாளர், செயலாளர், தேசிய அமைப்பாளர் ஆகிய பதவிகளைத்தவிர ஏனைய எந்தவொரு பதவியையும் வழங்குவதற்கு தயார் என கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவித்திருந்தார்.

2➤

## இந்தியாவுடன் பால் உற்பத்தித்துறை ஒத்துழைப்பு ஒப்பந்தம் வெளிப்படைத்தன்மையற்று உள்ளது!

### சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு!



இந்தியா இலங்கைக்கு இடையில் செய்துக்கொள்ளப்பட்டுள்ள கால்நடை வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தித்துறை ஒத்துழைப்பு ஒப்பந்தம் வெளிப்படைத்தன்மையற்றதாக உள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நாடாளுமன்றத்தில் விமர்சித்துள்ளார்.

பால் உற்பத்தித்துறையில் தன்னிறைவடைய இந்தியாவால் முடிந்துள்ளது. அது அவர்களது திறமை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கால்நடை வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தித்துறை ஒத்துழைப்பு ஒப்பந்தம் முதல் தடவை பேச்சுவார்த்தைகளின்போது தோல்வியடைந்திருந்தது என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆனால், தற்போது இந்த ஒப்பந்தம் வெற்றியளித்துள்ளதாக அரசாங்கம் கூறியுள்ளதுடன், அதற்கான ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அன்று தோல்வியடைந்த

2➤

## மின் கட்டணத்தை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுப்பது சட்டவிரோதம்! – ஜனக ரத்நாயக்க

மின் உற்பத்திக்கான செலவினங்கள் குறைந்திருக்கின்ற நிலையில், ஒரே வருடத்தில் மூன்றாவது முறையாக மின் கட்டணத்தை அதிகரிக்கக் கோரிக்கை விடுப்பது சட்டவிரோதச் செயல்!, என்று பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மின் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை மூன்றாவது முறையாகவும் மின்சார சபை முன்வைக்க கூடாது. சட்டமூலங்களுக்கு அமைவாக வருடத்தில் இரண்டு முறை மட்டுமே



மின் கட்டணத்தை அதிகரிக்க முடியும். இந்த நடைமுறைக்கு அப்பால் மின் கட்டணத்தை 22 சதவீதத்தால் அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கை சட்டவிரோதமானது.

2➤

## வெள்ள அபாய எச்சரிக்கை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது பலத்த மின்னல் தாக்கம் ஏற்படும் என்றும் எச்சரிக்கை!

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக விடுக்கப்பட்டிருந்த வெள்ள அபாய எச்சரிக்கை மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, இன்று இரவு பல பகுதிகளில் பலத்த மின்னல் தாக்கம் ஏற்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு, வடமத்திய, வடமேல், கிழக்கு, ஊவா மற்றும் தென் மாகாணங்களிலும் கண்டி மாவட்டத்திலும் மாலை அல்லது இரவு வேளைகளில் இடி, மின்னலுடன் கூடிய பலத்த மழை பெய்யக் கூடிய சாத்தியம் அதிகமாக உள்ளது என வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் போது அந்தப் பகுதிகளில் தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய அனர்த்தங்களை குறைக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தொடர்ச்சியாக நிலவும் கன மழையுடனான காலநிலை காரணமாக பல பகுதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. நேற்று இரவு முதல் தொடர்ச்சியாகப் பெய்த கன மழையின் காரணமாக கொழும்பு, மருதானை, பத்தரமுல்லை உள்ளிட்ட பகுதிகளிலுள்ள வீதிகளும் நீரில் மூழ்கியிருந்தன.

இதேவேளை மலைநாட்டில் நிலவும் அதிக மழைவீழ்ச்சி காரணமாக காசல்ரி நீர்தேக்கம் பெருக்கெடுக்கும்

2➤

## ஒரே பிரசவத்தில் 6 குழந்தைகள்!

கொழும்பு - காசல் வீதி மகளிர் வைத்தியசாலையில் தாய் ஒருவருக்கு ஒரே பிரசவத்தில் 6 குழந்தைகள் பிறந்துள்ளன.

ஆறு குழந்தைகளும் தற்போது சிசு தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக அந்த வைத்தியசாலையின் குழந்தைகள் பிரிவுக்கு பொறுப்பான விசேட வைத்தியர் சமன் குமார தெரிவித்தார்.

அதில் ஐந்து குழந்தைகள் தற்போது காசல் வீதி மகளிர் வைத்தியசாலையிலும்

2➤

## யாழ்ப்பாணம் குருநகரில் அதி சக்திவாய்ந்த ரி.என்.ரி வெடிபொருட்கள் கண்டெடுப்பு

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் ஒரு கிலோவுக்கும் அதிகமான ரி.என்.ரி. என்ற அதி சக்திவாய்ந்த வெடி பொருட்கள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இன்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையில் சூட்சமமாக மறைத்து வைக் கப்பட்டிருந்த இந்த அதிசக்தி வாய்ந்த வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் உள்ள ஜெட் டிக்கு அருகில் உள்ள அடர்ந்த காட்டுப்பகுதியில் இவை மறைத்து வைக்கப்பட்டிருந்ததை கடற்படையினர் கண்டுபிடித்துள்ளனர்.

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவ-தற்காக இந்த அதிசக்தி வாய்ந்த வெடிபொருட்களை மறைத்து வைத்திருக்கக்கூடும் என கடற்படையினர் சந்தேகிக்கின்றனர்.

வெடிபொருட்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக் காக சமர்ப்பிக்கப்படும் வரை கடற்படையினரின் பாது காப்பில் வைக்கப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப் மேலும் அறிவித்துள்ளது. (04)

## வெளிநாட்டுக்கு அனுப்புவதாக மோசடி யாழ் கொக்குவில் நபர் கைதானார்

வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாகத் தெரிவித்து இளைஞர் ஒருவரிடம் 80 இலட்சம் ரூபாவை மோசடி செய்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபரைப் பொலிஸார் நேற்றைய தினம் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியை சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு அம்பாறைப் பகுதியைச் சேர்ந்த குறித்த இளைஞனிடம் பணமோசடி செய்துள்ளார்.

இந்நிலையில், பாதிக்கப்பட்டவர் பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டினையடுத்து, குறித்த நபரைக் கைதுசெய்த பொலிஸார் இது குறித்த மேலதிக விசார ணைகளை முன்னெடுத்துள்ளனர். (04)

## விமான சேவையை நிறுத்த வேண்டிய நிலை ஏற்படும்

### அமைச்சர் தெரிவிப்பு

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கான வர்த்தகப் பங்காளியைக் கண்டுபிடிக்க முடியாவிட்டால் விமான சேவையை நிறுத்த வேண்டிய நிலை ஏற் படும், என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரி வித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு உரையாடும் போதே அமைச்சர் இத னைக் கூறியுள்ளார். ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் தொடர்ந்து நஷ்டத்தைச் சந்திக்க முடியாது எனவும், எனவே நிறு வனத்தின் 49 சதவீதப் பங்குகளை வேறு தரப்பின ருக்கு மாற்றி, கூட்டு முயற்சியாக நடத்த உத்தேசித் துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நாங்கள் கடனில் இருக்கிறோம். அது 1.2 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும், எனவும் அவர் குறிப்பிட் டுள்ளார். (04)

## ஒரே பிரசவத்தில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றைய ஒரு குழந்தை கொழும்பு தேசிய சிறுவர் வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (04)

## வெள்ள அபாய எச்சரிக்கை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையை எட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வான்கதவுகளை திறந்துவிட வேண்டிய நிலை ஏற்படும் என்றும் இதனால், தாழ்வுப் பகுதிகளில் உள்ள மக்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கு மாறும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நில்வள கங்கையின் தாழ்நிலப்பகுதிகளுக்கு விடுக் கப்பட்ட வெள்ள அபாய எச்சரிக்கை மேலும் 24 மணித் தியாலங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த ஆற்றை அண்மித்த தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகவும் அவதானமாக செயற்படுமாறு குறித்த திணைக்களம் கோரியுள்ளது.

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக, இதுவரை 2,297 குடும்பங்களைச் சேர்ந்த 8,724 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (04)

## மின் கட்டணத்தை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மின் கட்டண அதிகரிப்பிற்கான காரணங்களாக மின் சாரத்திற்கான கேள்வியும், மின் உற்பத்திச் செலவும் அதிகரித்திருக்கின்றன என்று மின்சார சபை கூறுகின் றது.

மின்சாரக் கேள்வி அதிகரிப்புத் தொடர்பான அறிக் கைகளை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு கோரி யிருந்தது. தற்போது வரையில் அது கிடைக்கப்பெற வில்லை.

எதிர்வரும் மூன்று மாதங்களுக்கான மின் உற்பத் திச் செலவினங்களை ஈடுசெய்ய வேண்டுமெனத் தெரிவித்தே மின்சார சபை கட்டண அதிகரிப்பைக் கோரியிருக்கின்றது. ஆனால், தற்போது அந்த நிலை மாறியிருக்கின்றது.

எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ள தரவுகளின்படி நீர் மின் உற்பத்திக்குத் தேவையான நீர் வளம் இருக்கின்றது. அதே நேரம் அனல் மின் உற்பத்திற்குத் தேவையான மூலப்பொருட்களின் விலைகளும் உலக சந்தையில் குறைவடைந்துள்ளன.

இந்தக் காலப்பகுதியில் மின்சாரத்திற்கான கேள் வியும் குறைந்தே காணப்படுகின்றது. ஆகவே, மின் கட்டண அதிகரிப்பு என்ற ஒன்று தேவையே இல்லை!

என்னுடைய கணிப்பின்படி, இந்த வருட இறுதியில் இலங்கை மின்சார சபையானது மின் கட்டணத்தை அதிகரித்தாலும் அதிகரிக்கா விட்டாலும் 30 பில்லியன் இலாபத்தைப் பெறும்!, எனவும் அவர் தெரிவித்துள் ளார். (04)

## இந்தியாவுடன் பால் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்பந்தம் இன்று வெற்றிபெற ஏதுவாக இருந்த காரணி களை அரசாங்கம் தெளிவுப்படுத்த வேண்டும் என அவர் கோரியுள்ளார்.

ஒப்பந்தத்தை கைச்சாத்திட அரசாங்கம் எடுத்திருந்த தீர்மானங்கள் தொடர்பில் வெளிப்படைத்தன்மையான பேச்சுவார்த்தைகள் அவசியமாகும் எனவும், தான் எவர்மீதும் சேறு பூச இந்த கேள்விகளை எழுப்பவில்லை எனவும், தொழிற்சங்கங்கள்தான் இந்த விடயத்தை தனது கவனத்துக்கு கொண்டுவந்தன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் தொழிற்சங்க உறுப்பினர் கள் துறைசார் அமைச்சரிடம் சென்று கேள்வியெழுப் பியபோது, தமக்கு ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து தான் அந்த அமைச்சரவைப் பத்திரம் அனுப்பட்டதாக வும் தமக்கு இதில் ஒன்றும் செய்ய முடியாது எனப் பதில ளித்துள்ளதுடன், இதில் தாம் கையெழுத்திட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதுதான் வெளிப்படைத்தன்மையா? எமது நாட்டில் முப்பதிற்கு அதிகமான என்.எல்.டி.பி பால் உற்பத்தி மையங்களையும் மில்க்கோவையும் விற்பனை செய்வதா அரசாங்கத்தின் நோக்கம்? என அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

இதுதான் சௌபாக்கிய ஆட்சியின் எதிர்காலத் திட்டமா? செல்வந்தர்களுக்கு இது சௌபாக்கியத் திட்ட மாக இருக்கலாம். ஆனால், முழு நாட்டுக்கும் இது மோசமான திட்டம் எனவும் அவர் விமர்சித்துள்ளார். (க)

## சுதந்திரக் கட்சியில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கமையவே சிரேஷ்ட உப தலைவர் பதவியை தயாசிறிக்கு வழங்குமாறு யோசனை முன்வைக்கப் பட்டுள்ளது.

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் தற்போது சிரேஷ்ட உப தலைவர்களாக ஆறு பேர் செயற்பட்டு வருகின்ற னர் என்பது குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தற்சமயம் வெளிநாடு சென்றுள்ளார். அவர் நாடு திரும் பிய பின்னரே அடுத்த கட்ட நகர்வுகள் பற்றி முடிவெடுப் பார் எனத் தெரியவருகின்றது. எனினும், சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறப்போவதில்லை என்ற உறுதியான அறிவிப்பை அவர் விடுத்துள்ளார். (அ)

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிகவும் இரகசியமான அறிக்கைகள் தங்களிடம் உள்ளதாக ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கைகளை எந்தக் காரணம் கொண்டும் வெளியிட முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, நான் நியமித்த ஜனாதிபதி ஆணைக் குழுவானது, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்சவுக்கு அறிக்கையைக் கையளிக்கும்போது, தனி யான ஒரு ஆவணத்தையும் அவரிடம் கையளித்தனர்.

இந்த ஆவணத்தைச் சட்டமா அதிபருக்கோ, புல னாய்வுப் பிரிவினருக்கோ, சி.ஐ.டியினருக்கோ, பொலி ஸாருக்கோ வழங்காமல், தனிப்பட்ட ரீதியாக வைத்துக் கொள்ளுமாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ரோஹான் குணரத்ன இரகசியமான அறிக்கைகள் தங்களிடம் உள்ளதாக தெரிவித்துள்ளார். அதே போன்று கோட்டாபய ராஜபக்சவிடமும் இரகசியமான ஆவணம் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

எனவே, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக இதுவரை நடத்தப்பட்ட அனைத்து விசாரணைகளும் தவறானவை என்பதோடு, அநீதியானவை என்பதை இங்கே நான் கூறிக்கொள்கிறேன்.

சனல் 4 வெளியிட்டுள்ள காணொளி தொடர்பாக, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிப்பது பற்றிய எதிர்க்கட்சித் தலைவரின் நிலைப்பாட்டில்தான் நானும் உள்ளேன்.

இந்த நாடாளுமன்றில் இதற்கு முன்னரும் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக தெரிவுக்குழு நியமிக்கப்பட்டது. அதில், எனக்கு எதிரானவர்கள் மட்டும்தான் உறுப்பி னர்களாக நியமிக்கப்பட்டார்கள்.

வன்மத்துடன், பழி வாங்கும் நோக்கத்துடன்தான் இந்தத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டது, எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க)






உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்

# கல்முனை நகரைப் பூச்சாடிகள் கொண்டு அழகுபடுத்தும் திட்டம்

(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை நகரை அழகுபடுத்தும் திட்டத்தின் ஓர் அங்கமாக நகரின் முக்கிய பகுதிகளில் பூச்சாடிகள் வைக்கும் வேலைத் திட்டம் நேற்று திங்கட்கிழமை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.எச்.ஜௌஸி, வேலைகள் அத்தியட்சகர் வி.உதயகுமரன், தொழில் நுட்ப உத்தியோகத்தர்களான எம்.அமீர், வி.சுகுமார், எம்.ஏ.நிஸார், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தொழிநுட்ப உத்தியோகத்தர் எம்.நௌசாத் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஒத்துழைப்புடன் மாநகர சபையினால் முன்னெடுக்கப்படும் இவ்வேலைத்திட்டத்தின் முதற்கட்டமாக கல்முனை மக்கள் வங்கிச் சந்தி முதல், தரவைக் கோவில் சந்தி வரையான இருபக்கப் போக்குவரத்துப் பாதையின் நடுவே பூச்சாடிகளை வைத்து அழகுபடுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



# பச்சிலைப்பள்ளியில் 8 குடும்பங்களுக்கு கமத்தொழில் அமைச்சினால் ஆடுகள்

## வதிவிடங்களை அண்டிய ஆடு வளர்க்கும் திட்டத்தின் கீழ் ஆடுகள் வழங்கி வைப்பு





கமத்தொழில் அமைச்சின் கிராமிய பொருளாதார பிரிவினால் வதிவிடங்களை அண்டிய பகுதிகளில் ஆடு வளர்க்கும் திட்டம் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அந்த வகையில், கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட எட்டு குடும்பங்களுக்கு பயனாளி ஒருவருக்கு மூன்று ஆடுகள் வீதம் 24 ஆடுகள் நேற்று திங்கட்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த திட்டத்தின் கீழ், கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 33 பயனாளிகளும், கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 12 பயனாளிகளும், பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 10 பயனாளிகளும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 8 பயனாளிகளுமாக 63 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர், கணக்காளர், உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இத்திட்டத்திற்காக பயனாளி ஒருவருக்கு 75,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (02)

# பாலஸ்தீனத்தில் உள்ள இலங்கையர்களை வெளியேற்றும் செயற்பாடு ஆரம்பமானது

பாலஸ்தீனத்தில் உள்ள இலங்கைத் தூதரக அலுவலகம், செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து காஸா பகுதியில் வசிக்கும் இலங்கையர்களை வெளியேற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது.

இந்தநிலையில், காஸா பகுதியில் மூன்று குடும்பங்கள் உட்பட 17 இலங்கையர்கள் வசித்து வருவதாக அந்த அலுவலகத்தின் தலைவர் பென்னட் குரே தெரிவித்துள்ளார்.

இதில் ஒரு குடும்பம் 23 ஆண்டுகளுக்கும் மேலாக குறித்த பகுதியில் வசிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அவர்கள் பாதுகாப்பாக செல்வதை உறுதி செய்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தற்போது அவர்கள், பாதுகாப்பாக இருப்பதாக பென்னட் குரே அறிவித்துள்ளார். (க)

# அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் வறுமை ஒழிப்பு வார கண்காட்சி நாளை

(எம்.எப்.நவாஸ்)

வறுமை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவும் மற்றும் சமுர்த்திப்பிரிவும் இணைந்து, உள்ளூர் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்தித் திறனை ஊக்குவிக்கும் முகமாக மாதாந்தம் நடைபெறும் வர்த்தக கண்காட்சியானது இம்மாதமும் நாளை புதன்கிழமை அட்டாளைச்சேனை பிரதேச செயலக வளாகத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அகமது ஷாபீர், கௌரவ அதிதிகளாக உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முசாபீர், பிரதேச செயலக கிளைத் தலைவர்களும் கலந்து கொள்வர்.

இக்கண்காட்சியை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் பார்வையிடுவதோடு, குறைந்த விலையில் பொருட்களை கொள்வனவு செய்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



# இந்தியா - வியட்நாம் வர்த்தகத்தினை 20 பில்லியன் டொலராக அதிகரிப்பதற்கு இரு நாடுகளும் இணக்கம்



இந்திய மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் 4 நாள் பயணமாக வியட்நாம் சென்றுள்ளார். அந்நாட்டுத் தலைநகர் ஹனோயில் வியட்நாம் வெளியுறவுத்துறை அமைச்சர் புய் தான் சன்னை அவர் நேற்றுச் சந்தித்தார். அப்போது வர்த்தகம், பாதுகாப்பு, எரிசக்தி உள்ளிட்ட துறைகளில் இந்தியா - வியட்நாம் நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து இருவரும் ஆலோசனை மேற்கொண்டனர்.

இந்தியா - வியட்நாம் இடையே ராஜீய உறவு ஏற்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் கொண்டாடும் தபால்தலைகளையும் அவர்கள் வெளியிட்டனர்.

ஹனோயில் 18 ஆவது இந்தியா - வியட்நாம் கூட்டு ஆணையக் கூட்டமும் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அமைச்சர்கள் ஜெய்சங்கர், புய் தான் சன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இது தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் டுவிட்டர் தளத்தில் வெளியிட்ட பதிவில், கூட்டு ஆணையக் கூட்டத்தில் அரசியல், முதலீடு, கல்வி மற்றும் பயிற்சி, அறிவியல் மற்றும் தொழிநுட்பம் உள்ளிட்ட துறைகளில் இந்தியா - வியட்நாம் நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்புக் குறித்து விவாதிக்கப்பட்டது.

வரும் ஆண்டுகளில் இருநாடுகளுக்கும் இடையிலான விரிவான உத்திசார்ந்த கூட்டுறவு மேலும் வலுவடையும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இந்தோ - பசிபிக் பிராந்தியம் குறித்த கண்ணோட்டம், உலக விவகாரங்களில் இருநாடுகளின் ஈடுபாடு, பல நாடுகள் இடம்பெற்றுள்ள பல்வேறு அமைப்புகளில் இந்தியா - வியட்நாம் இடையிலான ஒத்துழைப்புப் போன்றன குறித்தும் கூட்டத்தில் பேசப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கூட்டம் தொடர்பாக வியட்நாம் அரசு ஊடகமும் செய்தி வெளியிட்டுள்ளது. அமைதி, ஸ்திரத்தன்மை, பாதுகாப்பு, தடையற்ற கடல் மற்றும் வான்வழிப் போக்குவரத்து, சர்வதேச சட்டத்துக்கு உடன்பட்டு, கிழக்குக் கடற்பகுதியில் செயல்படுவது, அந்தச் சட்டத்தின் அடிப்படையில் தகராறுகளுக்கு தீர்வு காண்பது ஆகியவற்றின் முக்கியத்துவத்தை இந்தியாவும் வியட்நாமும் மீண்டும் உறுதிப்படுத்தின.

அறிவியல் மற்றும் தொழிநுட்பத்தில் இருநாடுகளின் ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், வியட்நாம் - இந்தியா எண்ம (டிஜிட்டல்) கூட்டுறவு ஒப்பந்தம் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்திக் கையொப்பமிடவும் இரு நாட்டு வெளியுறவு அமைச்சர்கள் தீர்மானித்தனர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தினை விரைவில் 20 பில்லியன் டொலராக அதிகரிக்க இந்தியாவும் வியட்நாமும் தீர்மானித்தன, என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பயணத்தின்போது, சர்வதேச உறவுகள், வெளிநாட்டுக் கொள்கைகள் குறித்து ஆராய்ச்சி மேற்கொள்ளும் வியட்நாம் ராஜீய அகடமியில் இந்திய வெளி யுறவு அமைச்சர் ஜெய்சங்கர் உரையாற்றியிருந்தார்.

அப்போது, இந்தோ-பசிபிக் பிராந்தியத்தைக் கட்டமைப்பதில் ஒத்துழைக்க வேண்டும் என்று இந்தியாவும் வியட்நாமும் எதனால் ஆர்வம் காட்டுகின்றன. தென் கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பான 'ஆசியான்' இன் முக்கியத்துவம், இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ள 'க்வாட்' கூட்டமைப்பின் பங்களிப்புப் போன்றவை குறித்து அங்கு பேசியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (04)

## முஸ்லீம் சிறுவன் குத்திக் கொலை – தாயார் படுகாயம் அமெரிக்காவில் நடந்த கொடூரம் – 71 வயது நபர் கைது!

அமெரிக்காவில் முஸ்லிம் தாய் மற்றும் அவரது 6 வயது மகன் மீது 71 வயது நபர் நடத்திய கத்துக் குத்துத் தாக்குதலில் அந்த சிறுவன் உயிரிழந்துள்ளான்.

இஸ்ரேலுக்கும், ஹமாஸ் படையினருக்கும் இடையே மோதல் நடைபெற்று வரும் சூழலில், இந்தத் தாக்குதல் மத வெறுப்புக் காரணமாக நடத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இல்லினொய்ஸ் மாகாணத்தின், சிகாகோ நகரில் கத்திக் குத்து காயங்களுடன் 32 வயதுப் பெண்ணையும் அவரது 6 வயது மகனையும் பொலிஸார் மீட்டு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். இதில், வரும் வழியிலேயே அந்தச் சிறுவன் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது.

ஏராளமான கத்திக் குத்துக் காயங்களுடன் சிகிச்சை பெற்று வரும் தாயின் உயிருக்கு ஆபத்தில்லை என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இந்தத் தாக்குதல் தொடர்பாக 71 வயது நபரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (04)



## சீன வங்கியின் முன்னாள் தலைவர் மோசடிக் குற்றச்சாட்டில் கைதானார்!

சீனாவில், அந்த நாட்டு அரசின் கட்டுப்பாட்டின் கீழ், பாங்க் ஒப் சீனா வங்கி செயல்பட்டு வருகிறது. இந்த வங்கியின் தலைவராக, 2019 - 2023 மார்ச் வரை, லியு லியாங்கே என்பவர் பதவி வகித்தார்.

பாங்க் ஒப் சீனா வங்கியின் தலைவராக இருந்தபோது, சட்ட விரோதமாகக் கடன் வழங்குதல், லஞ்சம் மற்றும் இதர சலுகைகளைப் பெற அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியமை போன்றவற்றில் ஈடுபட்டதாக, லியு லியாங்கே மீது, சமீபத்தில் ஊழல் தடுப்புக் கண்காணிப்புக் குழு குற்றம் சாட்டியது. இதையடுத்து, சீன கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து அவர் உடனடியாக நீக்கப்பட்டார்.

இந்த நிலையில், இந்த ஊழல் புகார் தொடர்பாக, லியு லியாங்கேவை நேற்று பொலிசார் கைது செய்துள்ளனர். (04)

## போருக்கு முன் - போருக்குப் பின் புகைப்படம் வெளியிட்ட இஸ்ரேல்



இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பு நடத்திய முதல் நாள் தாக்குதலுக்குப் பிறகு இஸ்ரேலில் ஏற்பட்ட சேதங்களை, போருக்கு முன் - போருக்குப் பின் என இரு படங்களாக இஸ்ரேல் வெளியிட்டுள்ளது. போருக்கு முன்பு - ஒக்டோபர் 6 இல் இருப்பதை விட, ஹமாஸ் தாக்குதல் நடத்திய ஒக்டோபர் 7 ஆம் திகதி மிகுந்த சேதங்களை இஸ்ரேல் சந்தித்துள்ளது.

செயற்கைக்கோள் மூலம் இப்படங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

பாலஸ்தீன் ஆதரவு பெற்ற காஸாவின் ஹமாஸ் படையினர் இஸ்ரேல் மீது கடந்த 7ஆம் திகதி காலை 6.30 அளவில் திடீர்த் தாக்குதல் நடத்தினர். சுமார் 3 மணிநேரம் நீடித்த இந்தத் தாக்குதலில் நூற்றுக்கும் அதிகமானோர் பலியானதாக அந்நாட்டு ஊடகங்கள் குறிப்பிடுகின்றன.

தொடர்ந்து 5,000 க்கும் அதிகமான ரொக்கெட்டுகளைச் செலுத்தி, ஹமாஸ் படையினர் அடுத்தடுத்துர் தாக்குதல் நடத்திய நிலையில், 2,500 ரொக்கெட்டுகளைக் கொண்டு இஸ்ரேல் பதில் தாக்குதல் நடத்தியது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் இஸ்ரேல் பகுதியிலிருந்த கட்டடங்கள் இடிந்து, குண்டுகளின் கரும்புகை சூழ்ந்து காணப்பட்டது. அவ்வாறு கரும்புகை சூழ்ந்து காணப்படும் இஸ்ரேல் பகுதிப் புகைப்படத்தை அந்நாட்டுப் பாதுகாப்புத் துறை தற்போது வெளியிட்டுள்ளது. (04)

## கொங்கோ படகு விபத்தில் 40 பேர் பலி! 165க்கும் மேற்பட்டோரைக் காணவில்லை



மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோ ஜனநாயகக் குடியரசில் (டிஆர் கொங்கோ) ஏற்பட்ட படகு விபத்தில் 40 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததோடு, 165 பேர் பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நாட்டின் கொங்கோ ஆற்றில் 300 க்கும் மேற்பட்டவர்களுடன் சென்று கொண்டிருந்த அந்தப் படகு, நடுவழியில் கவிழ்ந்துள்ளது. அளவுக்கு அதிகமாக ஆட்களை ஏற்றிச் சென்றதால் இந்த விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

விபத்து நடைபெற்ற பகுதியிலிருந்து 40 க்கும் மேற்பட்ட உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. சுமார் 185 க்கும் மேற்பட்டோர் உயிருடன் மீட்கப்பட்டனர். இது தவிர, படகில் இருந்த சுமார் 165 பேரைக் காணவில்லை என்றும் அவர்களை மீட்புக் குழுவினர் தேடி வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

கொங்கோவில் போதிய சாலை வசதிகள் இல்லாததால் அங்கு நீர் வழிப் போக்குவரத்து அதிகம் பயன்படுத்தப்படுகிறது. இருந்தாலும், அளவுக்கு அதிகமாக பயணிகளை அழைத்துச் செல்வது, போதிய பரமாமரிப்பு இல்லாதது போன்ற காரணங்களால் அங்கு அடிக்கடி படகு விபத்துகள் ஏற்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (04)

# கல்முனை மாநகர சபையில் ஓய்வுபெறும் ஊழியர்கள் இருவருக்கு பிரியாவிடை

(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையில் ஊழியர்களாகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் கே.கந்தசாமி, ஐ.இராமச்சந்திரன் ஆகியோருக்கான பிரியாவிடை நிகழ்வு நேற்று மாலை நடைபெற்றது.

மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.எச்.ஜௌஸி, வேலைகள் அத்தியட்சகர் வி.உதயகுமரன், சுகாதாரப் பிரிவின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் யூ.எம்.இஸ்ஹாக் ஆகியோர் குறித்த இரு ஊழியர்களினதும் நீண்ட கால அர்ப்





பணிப்பு நிறைந்த உன்னத சேவைகள் பற்றி எடுத்துரைத்து, வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில் மாநகர சபையின் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள், பிரிவுத் தலைவர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

# உலக உணவு தினத்தை முன்னிட்டு இறக்காமத்தில் சிறப்பு நிகழ்வு





(நூருல் ஹுதா உமர்)

உலக உணவு தினமான 16 ஆம் திகதி நேற்று, இறக்காமம் பிரதேச செயலக சுதேச வைத்தியப் பிரிவில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.றிஜாஸின் நெறிப்படுத்தலின் கீழ், சிறப்பு நிகழ்வு நடைபெற்றது.

இந்த விழிப்பூட்டல் நிகழ்வானது, இறக்காமம் மாணிக்கமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெற்றது.

இதில், இலைக் கஞ்சி தயாரித்தல் மற்றும் அதனால் கிடைக்கின்ற நன்மைகள் - எனும் தலைப்பில் இறக்காமம் ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி டொக்டர் கே.எல்.எம்.நக்பர் சிறப்பு உரையை வழங்கியிருந்தார்.

இந்நிகழ்வில், இறக்காமம் பிரதேச செயலகப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கே.எல். ஹம்சார் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு ஆரோக்கியமான தேசத்தை உருவாக்குதல் தொடர்பான விளக்கங்களை வழங்கினார்.

பாடசாலையின் அதிபர் ஐ.எல்.பரீட், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டு இலை கஞ்சி அருந்தியிருந்தனர்.




# தென்கிழக்குப் பல்கலைக்கழக வளாகம் பொதுமக்களுக்குத் திறக்கப்படவுள்ளது



(நூருல் ஹுதா உமர்)

தென்கிழக்குப் பல்கலைக்கழகம் மறைந்த மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களினால் உருவாக்கப்பட்டு 27 வருடங்கள் பூர்த்தியடைவதைச் சிறப்பிக்கும் முகமாக தென்கிழக்குப் பல்கலைகழக வளாகம் இம்மாதம் 24, 25ஆம் திகதிகளில் பொதுமக்கள் பார்வைக்காகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதன்போது, பிரதான நிகழ்வாக மர்ஹூம் அஷ்ரப் நினைவுப் பேருரை பல்கலைக்கழக பிரதான கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. இதில் பிரதம அதீதியாக மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களின் புதல்வர் அமான் அஷ்ரப் கலந்துகொள்ளவுள்ளார்.

அத்துடன் 350 மில்லியன் ரூபா செலவில் பல்கலைகழக உத்தியோகத்தர்களுக்கான 4 மாடிகள் கொண்ட இரு வீட்டுத் தொகுதிகள் திறப்பு விழா, மர நடுகை, மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகள், குறுந்திரைப்பட வெளியீடு, புதிய கண்டுபிடிப்புகள், புத்தகக் கண்காட்சி மற்றும் விளையாட்டு போட்டி உட்பட பல நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சமூகமயப்படுத்தி மக்களுடன் இணைக்கும் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாகவே, பல்கலைக்கழகம் பொதுமக்கள் பார்வைக்குத் திறந்துவிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

பல்கலைகழகத்திற்கு வருகை தருகின்ற பொதுமக்கள், பல்கலைக்கழகத்தின் பீடங்கள், நூலகம் மற்றும் இதர இடங்களுக்குச் சென்று அங்கு காட்சிப்படுத்தப்படுகின்ற அனைத்து விடயங்களையும் அவதானித்திட முடியும்.

# கிழக்கு மாகாணப் பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்த்தல்

## விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாணப் பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்ப்பதற்கான விண்ணப்பங்களை கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவின் பதில் செயலாளர் ஆ.மன்சூர் கோரியுள்ளார்.

விண்ணப்பிப்பதற்கான முடிவுத்திகதி நவம்பர் 11 எனவும், கிழக்கு மாகாணத்தில் வதியும் 18-35 வயதுக்குட்பட்ட ஆண் பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எழுத்துப் பயிற்சி மற்றும் பிரயோகப் பரீட்சைகளின் மூலம் இத்தெரிவு நடைபெறும் என்றும், பரீட்சைக் கட்டணமாக 500 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். பல்கலைக் கழக நினைவுத் தூபி அரச உயர்மட்டங்களுக்கு முறைப்பாடு

## துணைவேந்தரே இலக்கு எனத் தகவல்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சட்டத்துக்குப் புறம்பாக அனுமதி பெறப்படாமல் தூபி அமைக்கப்பட்டுள் ளது என அரச உயர்மட்டங்களுக்கு முறைப்பாடு செய்யப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதனடிப்படையில் ஜனாதிபதிச் செயலகம், பொலிஸ் திணைக்களம், இலஞ்ச ஊழல் ஆணைக்குழு ஆகிய வற்றுக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் விரிவுரையாளர் ஒருவரிடமிருந்தும், தனி ஆள்கள் இருவரிடமிருந்தும் அனுப்பி வைக்கப்பட்ட முறைப்பாடு களுக்கமைய குறிப்பிட்ட தூபி அமைக்கப்பட்டமை தொடர்பில் நிதிக் கையாளுகை மற்றும் அனுமதிகள் தொடர்பாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணை களை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவினால் விசாரணைக்காக அழைக்கப்பட்டிருப்ப தாகவும் அறியவருகிறது.

பல்கலைக்கழகத்தினுள் தூபி அமைக்கப்பட்டுள்ளமை தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதை யடுத்து, குறித்த தூபி இடிக்கப்படவுள்ளதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும், இது தூபியை இடிப்பதற்கான முயற்சியல்ல என்றும் முறையற்ற விதத்தில் தூபி அமைப்பதற்கு அனுமதித்தார், எனக் குற்றஞ்சாட்டிப் பல்கலைக்கழகத் துணைவேந்தரைப் பதவியில் இருந்து அகற்றுவதற்கான முயற்சியே அது என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரி விக்கின்றன.

ஏற்கனவே கடந்த பெப்ரவரி மாதம் இடம்பெற்ற துணைவேந்தர் தெரிவின்போது தற்போதைய துணை வேந்தர் மீளவும் பதவிக்கு வரக்கூடாது என்பதற்காகப் பல்கலைக்கழகத்தினுள் இருந்து பேராசிரியர் ஒருவர் உண்மைக்குப் புறம்பாகப் பல வதந்திகளைப் பரப்பி யதோடு, தூபி அமைக்கப்பட்டமை தொடர்பாகவும் வெவ் வேறு பெயர்களில் ஒரே கடிதத்தை முறைப்பாடுகளாக அனுப்பி இருந்ததைாகவும் அந்த வட்டாரங்கள் குறிப் பிட்டன. (01)

# பலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக யாழில் சனிக்கிழமை போராட்டம்

பலஸ்தீன மக்கள் மீதான இன அழிப்புத் தாக்குத லுக்கு எதிரான கண்டனத்தை வெளிப்படுத்தும் முகமாக எதிர்வரும் சனிக்கிழமை (21) காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்பாக அனைத்து ஜனநாயக முற்போக்கு சக்திகளையும் ஒன்றுகூடுமாறு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

ஊடக அறிக்கையிலேயே அதன் இணைச் செயலா ளர் த.ஸ்ரீபிரகாஸ் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

இஸ்ரேலின் தொடர்ச்சியான நில ஆக்கிரமிப்பால் பலஸ்தீன மக்கள் மேற்குக் கரையிலும் காஸாவிலும் சுருக்கப்பட்டுள்ளனர். இஸ்ரேல் அரசினதும் அதன் மேற்குலக கூட்டாளி நாடுகளினதும் அரசியல் பொருளா தார நலன்களுக்காக காஸா மக்கள் பலியாக்கப்பட்டு வருகின்றனர். குறிப்பாக குழந்தைகளும் பெண்களும் அதிகமாகக் கொல்லப்பட்டுள்ளனர்.

இத்தகைய மக்களுக்கு எதிரான கொடூரத்தாக்குதலைக் கண்டிக்கின்றோம். அத்துடன் காஸா மீதான ஆக்கிர மிப்பு யுத்தமானது தமிழ் மக்கள் முள்ளிவாய்க்காலில் முடக்கப்பட்டுக் கொன்றழிக்கப்பட்டதற்கு ஒப்பானதா- கப் பார்க்கப்பட வேண்டியதே. எனவே, ஒடுக்கப்படும் பலஸ்தீன மக்களுக்கு விடுதலை வேண்டி ஒருமித்துக் குரல் கொடுப்போம்.

இஸ்ரேலிய பயங்கரவாத ஆட்சியினர் காஸா மக்களுக் கான உணவு, மருத்துவம், மின்சாரம், தண்ணீர் ஆகிய அடிப்படைத் தேவைகள் சென்றடைவதைத் தடுத்ததோடு பல கட்டடங்களைத் தரைமட்டமாக்கி மக்களையும் கொன்றொழித்து வருகின்றனர்.

எல்லா ஒடுக்குமுறைப் போர்களிலும் குழந்தைகளின் உடலங்களே உலக மக்களின் மனச்சாட்சியை உலுக்கு வதாக அமைந்துவிடுவது போல் காஸா குழந்தைகள் பூக்களாகவும், பிஞ்சுகளாகவும் கருகிக்கிடப்பது தாங்க முடியாத மனவேதனையைத் தருகின்றது. இந்த அனு பவங்களைத் தமிழ் மக்கள் முள்ளிவாய்க்காலில் சுமந் தனர்.

உலக வல்லாதிக்க நாடுகளான அமெரிக்கா, பிரித் தானியா போன்றன இஸ்ரேலின் காஸா மக்கள் மீதான இன அழிப்புக்கு உடந்தையாக இருப்பதோடு, ஏனைய நாடுகள் இந்த அழிப்பைத் தடுத்து விடக் கூடாது என்ப தற்காக கடலிலும் தரையிலும் பாதுகாப்பு அரண்களாக யுத்தக் கப்பல்களையும் தமது படைகளையும் நிலை நிறுத்தியுள்ளன.

இதில், அவர்களின் அரசியல் பொருளாதார அதிகார நலன்கள் இருக்கின்றன. காஸா மக்களுக்கு எதிரான இந்தத் தாக்குதலை வேடிக்கை பார்த்து நிற்கும் அரபு நாடுகளும் ஏனைய நாடுகளும் தமது பொருளாதார நலனையும் அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுக ளுக்கு தமது அடிமை விசுவாசத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

உக்ரேன், ரஷ்யப் போரில் ரஷ்யாவுக்கு எதிராகக் கண்டனங்களை வெளிப்படுத்தி நின்ற ஐக்கிய நாடுகள் சபை இங்கு அனுதாபங்களை மட்டுமே வெளிப்படுத்தி தனது பக்கச்சார்பை நிரூபித்து நிற்கின்றது.

பாதுகாப்பான, சுதந்திரமான பலஸ்தீன நாடு அமை வதை - உலகின் பெரும்பாலான நாடுகள் குறிப்பிட்டு வருவது போன்று அந்த மக்களின் இறையாண்மைக் காகவும் சுதந்திர உரிமைக்காகவும் பலஸ்தீன மக்களுக் காக ஆதரவுக் குரல் கொடுப்பதற்கு எதிர்வரும் சனிக் கிழமை 10 மணிக்கு யாழ். மத்திய பேருந்து நிலையத் துக்கு முன்பாக அனைத்து ஜனநாயக முற்போக்கு சக் திகளையும் ஒன்றுகூடுமாறு வேண்டுகின்றோம், என்று அந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது. (அ)

## அனுமதியின்றி மணல் ஏற்றியோர் கைது!

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாற்றுப் பகுதியில் அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் ஏற்றுவதாகக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக வீதிச் சோதனை நடத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் இரண்டு டிப்பர் வாகனங்களும் ஓர் உழவு இயந்திரமும் கைப்பற்றப்பட்டதோடு, மூன்று சந் தேக நபர்களும் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ள னர். கைதுசெய்யப்பட்டசந்தேக நபர்கள் மூவரும் விசாரணைகளின் பின்னர் பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளனர். (02)

## இராமநாதபுரம் பகுதியில் 80 லீற்றர் கசிப்பு பிடிபட்டது



இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுட லைக் குளம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி நடைபெறுவதாக இராமநாதபுரம் பொலி சாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய இன்றைய தினம் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

அதில், 18,750 லீற்றர் கோடாவும், 80 லீற்றர் கசிப்பும், கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் உபக ரணங்கள் என்பன பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் பொலி சாரைக் கண்டவுடன் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். தப்பிச்சென்ற சந்தேகநபர்களைக் கைது செய்யும் நடவ டிக்கையில் இராமநாதபுரம் பொலிசார் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவதாகவும் இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளனர். (02)

# சீனா சென்ற ஜனாதிபதிக்கு சிறப்பான வரவேற்பு



பெல்ட் அன்ட் ரோட் - மாநாட்டில் கலந்து கொள்வ தற்காக நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு சீனா சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு சீனாவில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில், சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் கையும் சந்தித்து முக்கிய கலந்துரையாடல்களில் ஈடு படவுள்ளார்.

130 நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் 30 உலக ளாவிய அமைப்புகளின் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

பொது வளர்ச்சி மற்றும் செழுமை - என்ற கருப்பொரு ளில் குறித்த மாநாடு இம்முறை இடம்பெறுகின்றது.

நாட்டின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சீன அரசாங் கத்துடன் தனது விஜயத்தின் போது பேச்சுவார்த்தை நடத்தவும் ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார்.

ஜனாதிபதி எதிர்வரும் 20ஆம் திகதி வரை சீனாவில் தங்கியிருந்து பல முக்கிய கலந்துரையாடல்களில் ஈடு படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க)

# JRIDE
BEYOND THE ROAD

# ONLINE TAXI APP FROM JAFFNA

**ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.**


## நாங்கள் தயாராகிவிட்டோம்!

**யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)**

**உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.**

**இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!**






இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play

Download on the App Store



**+94 21 222 8358**

**JRIDE TAXI SERVICE**
**SPEED IT NET**
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

# ஹமாஸ் தாக்குதலில் இலங்கைப் பெண் பலி!



இஸ்ரேல் மீதான ஹமாஸ் தாக்குதலின் பின்னர் காணாமல் போயிருந்த இலங்கையைச் சேர்ந்த பெண் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டுப் பொலிஸார் இன்று உறுதிப்படுத்தியுள்ளனர்.

களனி ஈரியவெடிய பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட அனுலா ரத்நாயக்க (ஜயதிலக்க) என்பவரே தாக்குதலின் போது உயிரிழந்துள்ளாரென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உயிரிழந்த பெண்ணின் சடலம் இரண்டு நாட்களுக் குள் இலங்கைத் தூதரகத்திடம் ஒப்படைக்கப்படவுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.10.2023இல் வெளியிடப்பெற்றது.